## 2024 ஆம் ஆண்டிற்கான தனியார் பாதுகாப்புச் சேவையைப் பெற்றுக்கொள்வதற்கான பெறுகை அறிவித்தல் - பருத்தித்துறை நகரசபை

| | | |
|---|---|---|
| கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி | : | 2023.12.12 – 2023.12.27 வரை<br>மு.ப 9.30 தொடக்கம் பி.ப 3.00 மணி வரை |
| கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி | : | 2023.12.28 பி.ப. 3.00 மணி வரை |
| கேள்வி திறக்கும் திகதி | : | 2023.12.28 பி.ப. 3.00 மணி |
| கேள்வி திறக்கும் இடம் | : | பருத்தித்துறை நகரசபை |

01) பருத்தித்துறை நகரசபையின் உள்ளூராட்சி மன்ற பெறுகைகள் குழுத்தலைவரால் இலங்கை பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்த தகுதி வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட சேவைகளுக்காகக் கோரப்படுகின்றன.

02) சேவை வழங்குநர்களின் தலைமைக்காரியாலயம் அல்லது கிளைக்காரியாலயம் யாழ் மாவட்டத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.

03) சேவை வழங்குநர்கள் குறித்த சேவையில் ஆகக்குறைந்தது 07 வருட அனுபவத்தினை பெற்றிருத்தல் வேண்டும்.

04) மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப்படிவக் கட்டணமாக **ரூபா2,000.00** (VAT,NBT நீங்கலாக) இனைச் செலுத்துவதுடன் , மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப்பணமாக **ரூபா.5000.00** இனை பணமாக அலுவலகத்தில் செலுத்தி விண்ணப்பபடிவத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

05) கேள்விப்பத்திர ஆவணங்கள் 2022.12.28 ஆம் திகதி பி.ப 3.00 மணிக்கு முன்பாக கிடைக்கக்கூடியவாறு **செயலாளர், பருத்தித்துறை நகரசபை, கல்லூரி வீதி, பருத்தித்துறை** என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது அதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும்.பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும்.

06) கேள்விப்பத்திரங்கள் அனைத்தும் பெறுகை நேர முடிவில் உடனடியாக திறக்கப்படும். அதில் கேள்விதாரரோ அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரோ கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவர்.

07) கேள்விப்பத்திரம் உள்ளடங்கிய கடித உறையின் மேல்மூலையில் மூலப்பிரதி, இணைப்பிரதி எனக் குறிப்பிடப்படுவதுடன் கேள்வியின் பெயரும் குறிப்பிடப்படல் வேண்டும்

08) கேள்வி பத்திரங்கள் தொடர்பான இறுதி முடிவு எடுக்கும் அதிகாரம் பெறுகைக்குழுத் தலைவருக்கே உரியதாகும்.

09) மேலதிக விபரங்களை அலுவலக கடமை நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இல 021 226 3213

| இல | பாதுகாப்புச் சேவை தேவைப்படும் இடங்கள் | தேவைப்படும் பாதுகாப்பு உத்தியோகத்தர் எண்ணிக்கை | | வேண்டப்படும் பாதுகாப்பு பிணை | |
|---|---|---|---|---|---|
| | | பகல் | இரவு | பாதுகாப்புப் பிணை தொகை (மீளளிக்கக் கூடியது) | செல்லுபடியாகும் காலம் |
| 1. | பருத்தித்துறை நவீன சந்தைக்கடைத் தொகுதியும் மரக்கறிச்சந்தையும் | 01 | 01 | 5000.00 | **60** நாட்கள் |
| 2. | பருத்தித்துறை மீன் சந்தை | 01 | 01 | | |
| 3. | 3ஆம் குறுக்குத்தெரு களஞ்சிய அறை | 01 | 01 | | |

தலைவர்,
உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு,
பருத்தித்துறை நகரசபை.

12.12.2023